TAMILTH Tiruchirapalli 1 Regional_02 G SURESH 233021
© 2006-2017 Kasturi & Sons Ltd. - -shanmugam.k@thehindutamil.co.in -

சின்னச் சின்னதாய்...

ரஜினிகாந்த் கருத்துக்கு கமலஹாசன் வரவேற்பு

சென்னை: சென்னையில் தனது இல்லத்தில், நடிகர் ரஜினிகாந்த் நேற்று இரவு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, டெல்லியில் நடைபெற்று வரும் குடியுரிமை சட்டம் தொடர்பான வன்முறை சம்பவங்கள் குறித்து கருத்து தெரிவித்திருந்தார். அந்த வன்முறைகளுக்கு மத்திய அரசுதான் காரணம் என குற்றம்சாட்டி இருந்தார்.

இந்நிலையில், ரஜினியின் கருத்தை வரவேற்று மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமலஹாசன், தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். அதில், "சபாஷ் நண்பர் ரஜினிகாந்த் அவர்களே, அப்படி வாங்க. இந்த வழி நல்ல வழி. தனி வழி அல்ல, ஒரு இனமே நடக்கும் ராஜபாட்டை. வருக, வாழ்த்துகள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

கரூர் எம்.பி அலுவலக திறப்பு விழா

கரூர்: கரூர் வடக்கு ராமகிருஷ்ணபுரத்தில் கரூர் மக்களவை உறுப்பினர் அலுவலக திறப்பு விழா நேற்று நடைபெற்றது. கரூர் மாவட்ட காலணிகள் மற்றும் பைகள் தயாரிப்பு மற்றும் பழுது நீக்கும் பணியாற்றும் பட்டியலினத்தைச் சேர்ந்த ராமசந்திரன் ரிப்பன் வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

கரூர் மாவட்ட திமுக பொறுப்பாளரும் அரவக் குறிச்சி எம்எல்ஏவுமான வி.செந்தில்பாலாஜி, காங்கிரஸ் மாவட்டத் தலைவர் ஆர்.சின்னசாமி, நகரத் தலைவர் சவுந்தரராஜன், கரூர் நகர்மன்ற முன்னாள் உறுப்பினர் ஸ்டீபன்பாபு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பள்ளி மாணவிகளுக்கு தற்காப்பு கலை பயிற்சி

அரியலூர்: அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், மாவட்ட குழந்தை கடத்தல் தடுப்பு பிரிவு காவல்துறை சார்பில் ஆபத்து நேரங்களில் மாணவிகள் தங்களையும் தங்களை சார்ந்தவர்களையும் எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது குறித்த பயிற்சி நேற்று முன்தினம் அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில், மாவட்ட குழந்தை கடத்தல் தடுப்பு பிரிவு காவல் ஆய்வாளர் பி.சுமதி மற்றும் போலீஸார் கலந்துகொண்டு தற்காப்பு கலையான கராத்தே பயிற்சி அளித்தனர். தொடர்ந்து, காவலன் செயலி, சாலை பாதுகாப்பு மற்றும் தொலைபேசி எண் 100 குறித்து மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

திமுக இளைஞரணி உறுப்பினர் அட்டை வழங்கல்

பெரம்பலூர்: பெரம்பலூரில் திமுக இளைஞரணி சார்பில் உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்ட திமுக கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, திமுக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஹரிபாஸ்கர் தலைமை வகித்தார். துணை அமைப்பாளர்கள் கரிகாலன், அன்பழகன், காட்டுராசா, ரசூல் அகமது, தங்ககமல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டச் செயலாளரும், மாவட்ட ஊராட்சித் தலைவருமான ராஜேந்திரன், மாநில நிர்வாகிகள் துரைசாமி, டாக்டர் வல்லபன், பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் அட்சயகோபால், வக்கீல் ராஜேந்திரன் உட்பட பலர் பேசினர். சிறப்பு விருந்தினராக திமுக கொள்கைப் பரப்பு செயலாளரும் நீலகிரி தொகுதி எம்பியுமான ஆ.ராசா, பெரம்பலூர் மாவட்ட திமுக இளைஞரணியில் உறுப்பினராக சேர்ந்த 12,060 பேருக்கு உறுப்பினர் அட்டைகளை வழங்கினார்.

நகரச் செயலாளர் பிரபாகரன், ஒன்றியச் செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, அண்ணாதுரை, நல்லதம்பி, மதியழகன், ஒன்றிய பொறுப்பாளர்கள் ஜெகதீசன், சோமுமதியழகன், ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தந்தையை கொன்ற மகனுக்கு ஆயுள் சிறை

திருச்சி: திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் அருகேயுள்ள ராசாம்பாளையம் நடுத்தெருவைச் சேர்ந்தவர் பரதேசி(எ) சுப்பிரமணி(55). இவருடைய மகன் பாலமுருகன்(25) வேலைக்கு செல்லாமல் ஊர் சுற்றிக் கொண்டிருந்தார். இதைக் கண்டித்ததால் ஆத்திரமடைந்த பாலமுருகன், தனது தந்தை சுப்பிரமணியை கடந்த 9.1.2019-ம் தேதி விறகு கட்டையால் அடித்துக் கொலை செய்தார்.

இதுகுறித்து மண்ணச்சநல்லூர் போலீஸார் வழக்கு பதிவு செய்து பாலமுருகனை கைது செய்தனர். இந்த வழக்கின் விசாரணை திருச்சி மாவட்ட 3-வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி கர்ணன், குற்றம்சாட்டப்பட்ட பாலமுருகனுக்கு ஆயுள் தண்டனையும், ரூ.500 அபராதமும் விதித்து நேற்று தீர்ப்பளித்தார்.

மாநில அளவிலான கால்பந்து போட்டி பிஷப் ஹீபர் கல்லூரி அணிக்கு கோப்பை

திருச்சி: கல்லூரிகளுக்கு இடையே மாநில அளவிலான கால்பந்து போட்டி திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி மைதானத்தில் கடந்த 24-ம் தேதி தொடங்கியது. நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி அணி 4-1 கோல் கணக்கில் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியின் மரூன் அணியை வென்று கோப்பையை கைப்பற்றியது. போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு புதுச்சேரி கூடைப்பந்துக் கழக துணைத் தலைவர் ஜி.ரான்சன் தாமஸ், செயின்ட் ஜோசப் கல்லூரி செயலாளர் எஸ்.பீட்டர், முதல்வர் எம்.ஆரோக்கியசாமி சேவியர், விளையாட்டு ஒருங்கிணைப்பாளர் எம்.பெர்க்மென்ஸ், உடற்கல்வி இயக்குநர் ஏ.பிரேம் எட்வின், உதவி உடற்கல்வி இயக்குநர் எஸ்.ரெனில்டன் பிரீஸ், திருச்சி மாவட்ட கால்பந்து கழகச் செயலாளர் சி.ரங்கராஜு உள்ளிட்டோர் பரிசுகளை வழங்கினர்.

கிறிஸ்தவர்களின் 40 நாள் தவக்காலம் தொடக்கம்

தேவாலயங்களில் சிறப்பு திருப்பலி

■ பெரம்பலூர்/ அரியலூர்/ திருச்சி

கிறிஸ்தவர்களின் 40 நாள் தவக் காலம் நேற்று சாம்பல் புதனுடன் தொடங்கியது. இதையொட்டி பெரம்பலூர், அரியலூர் திருச்சி மாவட்டங்களில் உள்ள தேவாலயங்களில் நேற்று சிறப்பு திருப்பலி நடைபெற்றது.

கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளை நினைவுகூரும் வகையில், ஆண்டுதோறும் ஈஸ்டர் பண்டிகைக்கு முந்தைய 40 நாட்களை தவக்காலமாகக் கடைபிடிக்கின்றனர். இதன் தொடக்க நாள் சாம்பல் புதன் எனப்படுகிறது.

அதன்படி, நிகழாண்டு தவக்காலம் சாம்பல் புதன்கிழமையான நேற்று தொடங்கியது. இதையொட்டி, கடந்த ஆண்டு குருத்தோலை ஞாயிறு நாளில் பயன்படுத்தப்பட்ட குருத்தோலைகளை கிறிஸ்தவர்களின் வீடுகளிலிருந்து சேகரித்தனர். தேவாலயங்களில் நடைபெற்ற திருப்பலி, ஆராதனைகளில் அந்த குருத்தோலைகளை எரித்துக் கிடைத்த சாம்பலால், பக்தர்களின் நெற்றியில் பங்குத்தந்தையர் சிலுவை அடையாளம் இட்டனர்.

பெரம்பலூர் புனித பனிமய மாதா தேவாலயம், பாளையம் கிராமத்தில் உள்ள புனித சூசையப்பர் தேவாலயம், நூத்தப்பூர், தொண்டமாந்துறை, பாத்திமாபுரம், திருவாளந்துறை, திருமாந்துறை, எறையூர், பாடலூர் உட்பட மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் உள்ள தேவாலயங்களில் சாம்பல் புதனை முன்னிட்டு சிறப்பு திருப்பலி நடைபெற்றது. தவக்கால நாள்களில் கிறிஸ்தவர்கள் ஆடம்பர நிகழ்வுகளைத் தவிர்த்து, விரதமிருந்து ஜெபம், தவம், தர்மம் போன்ற செயல்களைக் கடைபிடிப்பது வழக்கம்.

அரியலூர் மாவட்டத்தில்...

அரியலூர் மாவட்டம் ஏலாக்குறிச்சியில் உள்ள அடைக்கல அன்னை ஆலயத்தில் பங்குத் தந்தை சுவைக்கின் தலைமையில், சிறப்பு திருப்பலி நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட கிறிஸ்தவர்களுக்கு சாம்பல் பூசி தவக்காலத்தை தொடங்கி வைத்தார்.

அரியலூர் புனித லூர்து அன்னை ஆலயத்தில் அந்தோனி சாலமோன் தலைமையில் சிறப்பு திருப்பலி நடைபெற்று, இதேபோல, ஆண்டிமடம், வரதராஜன்பேட்டை, செந்துறை, மீன்சுருட்டி உள்ளிட்ட தேவாலயங்களில் பங்குத் தந்தையர்கள் தலைமையில் சிறப்பு திருப்பலி நடைபெற்றது.

திருச்சி மாவட்டத்தில்...

திருச்சி மாவட்டத்தின் பல்வேறு கிறிஸ்தவ ஆலயங்களிலும் சிறப்பு திருப்பலி நடைபெற்றது. இதில், கிறிஸ்தவர்கள் திரளானோர் பங்கேற்றனர். இந்த தவக் காலம் இயேசு உயிர்த்தெழுந்த நாளான ஈஸ்டர் பண்டிகையுடன் (ஏப்.12) நிறைவடைகிறது.

ரூ.15,000 லஞ்சம் பெற்ற காவல்நிலைய எழுத்தர் கைது

■ கரூர்

விபத்துக்குள்ளான காரை விடுவிக்க ரூ.15,000 லஞ்சம் பெற்ற வேலாயுதம்பாளையம் காவல்நிலைய எழுத்தர் நேற்று கைது செய்யப்பட்டார்.

கரூர் மாவட்டம் தளவாபாளையம் பகுதியில் கடந்த 16-ம் தேதி இரு கார்கள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரு காரில் வந்த புலியூரைச் சேர்ந்த மகாமுனி மனைவி மாணிக்கவள்ளி உயிரிழந்தார். விபத்துக்குள்ளான மற்றொரு காரை ஓட்டி வந்த ராஜசேகரன் சொந்த ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். எனினும், விபத்துக்குள்ளான இரு கார்களையும் வேலாயுதம்பாளையம் போலீஸார் பறிமுதல் செய்தனர்.

இந்நிலையில், ராஜசேகர் ஓட்டி வந்த காரின் உரிமையாளரான சேலம் அன்னதானப்பட்டியைச் சேர்ந்த அபிஷேக்மாறன், தனது காரை விடுவிக்க வேலாயுதம் பாளையம் காவல் நிலையத்துக்கு வந்துள்ளார். அப்போது, கார் ஓட்டுநர் ராஜசேகரை சொந்த ஜாமீனில் விடுவித்ததற்கும், காரை விடுவிக்கவும் ரூ.15,000 லஞ்சமாக தர வேண்டும் என காவல்நிலைய எழுத்தர் செந்தில்குமார்(42) கேட்டுள்ளார்.

ஆனால், லஞ்சம் தர விரும்பாத அபிஷேக்மாறன், இதுகுறித்து கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை போலீஸில் புகார் அளித்தார்.

இதையடுத்து, ஊழல் தடுப்பு போலீஸாரின் ஏற்பாட்டின்படி, ரசாயனம் தடவிய ரூ.15,000 பணத்தை வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் எழுத்தர் செந்தில்குமாரிடம் அபிஷேக்மாறன் நேற்று கொடுத்தார். அப்போது, அங்கு மறைந்திருந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் ரேகா தலைமையிலான போலீஸார், செந்தில்குமாரை கைது செய்தனர். தொடர்ந்து அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

உயர்நீதிமன்றத்தில் வேலைவாங்கித் தருவதாக கூறி

ரூ. 37 லட்சம் மோசடி: முசிறி வழக்கறிஞர் கைது

■ நாமக்கல்

சென்னை உயர்நீதிமன்றத்தில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி ரூ.37 லட்சம் மோசடி செய்த முசிறியைச் சேர்ந்த வழக்கறிஞரை நாமக்கல் மாவட்ட குற்றப்பிரிவு காவல் துறையினர் கைது செய்தனர்.

திருச்சி மாவட்டம் முசிறியைச் சேர்ந்தவர் பி.சதீஸ்குமார் (35). இவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராக உள்ளார். இவர் நாமக்கல் மாவட்டம், முட்டாஞ்செட்டியைச் சேர்ந்த கலைசெல்வன், கனிமொழி தம்பதி மகன் அடல்பிஹாரி அலெக்சாண்டருக்கு, சென்னை உயர்நீதி மன்றத்தில் எழுத்தாளர் வேலை வாங்கித் தருவதாக கூறியுள்ளார். இதற்காக ரூ.4.50 லட்சம் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதை உண்மையென நம்பி சதீஸ்குமார் வங்கி கணக்கில் ரூ.3.50 லட்சத்தை கலைச்செல்வன் செலுத்தியுள்ளார். மேலும், நேரில் ரூ.1 லட்சம் ரொக்கமாகவும் வழங்கியுள்ளார். எனினும், வழக்கறிஞர் சதீஸ்குமார் கூறியபடி வேலை எதுவும் வாங்கித் தரவில்லை. இதுகுறித்து நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கனிமொழி புகார் அளித்தார்.

புகாரின்பேரில் நாமக்கல் மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில் இதுபோல் 11 பேரிடம் வழக்கறிஞர் சதீஸ்குமார் மோசடி செய்தது தெரியவந்தது. இதற்காக ரூ.37 லட்சத்து 8 ஆயிரம் வாங்கியதும் தெரியவந்தது. இதையடுத்து முசிறியில் பதுங்கி இருந்து சதீஸ்குமாரை, மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

‘2021 சட்டப்பேரவைத் தேர்தலிலும் அதிமுக வெற்றி பெறும்’

■ கரூர்

2021 சட்டப்பேரவைத் தேர்தலிலும் அதிமுக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும் என மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தெரிவித்தார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 72-வது பிறந்த நாள் விழா மற்றும் தமிழக அரசின் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டம் கரூர் வடக்கு நகரச் செயலாளர் எம்.பாண்டியன் தலைமையில் கரூர் வேலுசாமிபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் பேசியது: இந்த ஆட்சி எத்தனை நாள் நீடிக்கும் என அனைவரும் பேசி வந்த நிலையில், 3 ஆண்டுகளை கடந்து 4-ம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. எனவே. இந்த ஆட்சிக் காலத்தை பூர்த்தி செய்வது மட்டுமின்றி, 2021-ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலிலும் அதிமுக வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும் என்றார்.

நடிகர் வையாபுரி, தலைமை கழக பேச்சாளர் கோபிகாளிதாஸ், மாவட்ட அவைத் தலைவர் ஏ.ஆர்.காளியப்பன் உள்ளிட்டோர் பேசினர்.

மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் என்.முத்துக்குமார், முன்னாள் எம்எல்ஏ காமராஜ், இளைஞர், இளம் பெண்கள் பாசறை மாவட்டச் செயலாளர் வி.வி.செந்தில்நாதன், கரூர் மத்திய நகரச் செயலாளர் வை.நெடுஞ்செழியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு அரசு / பொதுப்பணித்துறை

பொதுப்பணித்துறை / கட்டட அமைப்பு இன விலை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு / ஒப்பந்த முறை : சி படிவம் – இன விலை முறை குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். 17 / 2019–20 / கட்டட (க & ப) வட்டம் / திருச்சி / நாள் : 24.2.2020

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் மற்றும் அவரது சார்பாக கண்காணிப்புப்பொறியாளர், பொ.ப.து, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருச்சி அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீர்க்காணும் பணிகளுக்கு குறிப்பிட்ட தேதியில் பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகிறது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினமே பிற்பகல் 3.30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களுடைய முகவர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிடத்திற்கு உள் மற்றும் வெளிப்புறம் மின் வசதிகள் ஏற்படுத்தும் பணி. பணியின் தோராய மதிப்பு (ரூபாய் இலட்சங்களில் சரக்கு மற்றும் சேவை வரி 12% உட்பட) : 74.90 முன் வைப்புத் தொகை (ரூபாய்) : 47,500/– ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் : 06.03.2020 ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கிடைக்க பெறும் காலம் : 27.02.2020 முதல் 05.03.2020 பிற்பகல் 5.45 மணி வரை. ஒப்பந்தக் காலம் : [illegible]

குறிப்பு: (1) தகுதி விவரம் உள்ளிட்ட பிற அனைத்து விவரங்களும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை கீழ்க்கண்ட இணையதளத்தில் இலவசமாக தருவித்துக்கொள்ளலாம் www.tenders.tn.gov.in. & www.tn.tenders.gov.in 2) மேலும் கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம் திருச்சி அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு Rs.15,000/- + GST Rs.1800/- தொகையை செலுத்தியும் நேரில் பெற்றுக்கொள்ளலாம். (3) முன் வைப்புத்தொகை வரவு வைக்கப்பட வேண்டிய அலுவலர்: மின்பொறியாளர், பொ.ப.து., மின் கோட்டம், திருச்சி-20. (4) ஒப்பந்தக்காரர்கள் குறைந்தபட்ச தகுதி : பொதுப்பணித்துறையில் வகுப்பு II-ல் ரூ.75.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் மதிப்பில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள. (5) ஒப்பந்தக்காரர் தகுதி குறித்த விபரம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவர குறிப்புகள் மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். (6) ஒப்பந்தப்புள்ளி அட்டவணை பெறவும் அல்லது உறையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அளிக்கவும் நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாள், ஏதாவது ஒரு காரணத்தினால் அரசு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், ஒப்பந்தப்புள்ளி அட்டவணை அதற்கு அடுத்த அலுவலக வேலை நாளில் அளிக்கப்படும். அதேபோல் உறையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளியையும் அடுத்த நாள் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். (7) இப்பணிக்கான முன் தகுதி விண்ணப்பம் குறித்து ஏதேனும் விளக்கம் தேவைப்படின் அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட(க&ப)வட்டம், கன்டோன்மென்ட், திருச்சி-1 அலுவலக தொலைபேசி எண்: 04312462604.

செ.ம.தொ.இ/ 1101 /ஒப்பந்தப்புள்ளி/2020

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (க &ப) வட்டம், திருச்சி – 1

FORM A

Public Announcement

(Under Regulation 6 of the Insolvency and Bankruptcy Board of India (Insolvency Resolution Process for Corporate Persons) Regulations, 2016)

FOR THE ATTENTION OF THE CREDITORS OF KAMACHI INDUSTRIES LIMITED

	Relevant Particulars	
1	Name of Corporate Debtor	KAMACHI INDUSTRIES LIMITED (Formerly Kamachi Sponge & Power Corporate Ltd.)
2	Date of incorporation of Corporate Debtor	08/10/2003
3	Authority under which Corporate Debtor is incorporated / registered	Registrar of Companies - Chennai
4	Corporate Identity No. / Limited Liability Identification No. of corporate debtor	U27106TN2003PLC051727
5	Address of the registered office and principal office (if any) of corporate debtor	ABC Trade Centre, Old No.50, (New No. 39), 3rdFloor, Anna Salai,Chennai, Tamil Nadu-600002.
6	Insolvency commencement date in respect of corporate debtor	NCLT order dated 19/02/2020 (Published on NCLT Website on 25/02/2020)
7	Estimated date of closure of insolvency resolution process	17/08/2020
8	Name and registration number of the insolvency professional acting as interim resolution professional	Mr. Vikas Prakash Gupta IP No. IBBI/IPA-001/IP-P00501/2017-18/10889
9	Address and e-mail of the interim resolution professional, as registered with the Board	Address:C/o. Dipti Enterprises,55, Nehru Putla, Itwari, Nagpur, Maharashtra-440002. Email : vikas.gupta@bngca.com
10	Address and e-mail to be used for correspondence with the interim resolution professional	Address : New No.37/4,Vasantham II, Main Road, Alwarthiru Nagar Annexe, Chennai, Tamil Nadu-600087. Email : ip.kamachi@gmail.com
11	Last date for submission of claims	10/03/2020
12	Classes of creditors, if any, under clause (b) of sub-section (6A) of section 21, ascertained by the interim resolution professional	Not Applicable
13	Names of Insolvency Professionals identified to act as Authorised Representative of creditors in a class (Three names for each class)	Not Applicable
14	(a) Relevant Forms and (b) Details of authorized representatives are available at :	(a) Relevant Forms available at https ://ibbi.gov.in/home/downloads (b) Not Applicable

Notice is hereby given that the National Company Law Tribunal, Chennai Bench has ordered the commencement of a corporate insolvency resolution process of Kamachi Industries Limited vide NCLT order dated 19/02/2020 published on 25/02/2020.

The creditors of Kamachi Industries Limited are hereby called upon to submit their claims with proof on or before 10/03/2020 to the interim resolution professional at the address mentioned against entry No. 10.

The financial creditors shall submit their claims with proof by electronic means only. All other creditors may submit the claims with proof in person, by post or by electronic means.

Submission of false or misleading proofs of claim shall attract penalties.

Sd/-

Vikas Prakash Gupta
Interim Resolution Professional
IBBI/IPA-001/IP-P00501/2017-18/10889

Date : February 27, 2020
Place : Mumbai

வரி விளம்பரங்கள்

தொழில்

டீலர்கள் தேவை

SONA BELT 3X3 தினம் ரூ.7,500: XXX BELT 3X3 தினம் ரூ.7,500 டெலிவரி ஏஜென்ட்: Ct: 8940589268

பொது

சுற்றுலா

6 ஷீரடி-மார்ச் 8, 22, 29 பண்டரிபுரம், மந்த்ராலயம் ஏப். 5,12,19,26, மே 3,10,17,24,31
8 காசி, கயா-மார்ச் 16,30 அலகாபாத்-ஏப். 6,13,20,27, மே 4,11,18,25
11 காசி, கயா-மார்ச் 20 டெல்லி, ஆக்ரா, மதுரா - ஏப். 17, மே 1, 11, 22
16 காசி, அயோத்தி-ஏப். 24
16 நேபாள், முக்திநாத், காசி ஏப். 19, மே 3,10,17,24, ஜுன் 14
14 நவஜோதிலிங்கம்-ஏப்.12
15 பஞ்சதுவாரகா-மார்ச் 10
7 கேரளா படகு வீடு - மே 18
11 கேங்டாக், டார்ஜிலிங் ஏப். 8, 15, 22, 29, மே 6, 13, 20, 27
14 சிம்லா, குளுமணாலி
14 காஷ்மீர்-மே 5, 14, 23
16 பத்ரிநாத், கேதார்நாத் கங்கோத்ரி, யமுனோத்ரி மே 3, 12, 18, 27, ஜுன் 2, 11
9 இலங்கை 4 கோவா
SRINIVASA TOUR, Trichy 8428800023

IRCTC பாரத் தர்ஷன்
ராமாயண யாத்திரை
நாசிக் - ஹம்பி - சித்ரகூடம் - பக்சார் - வாரணாசி - ரகுநாதபுரம் - சீதாமர்ஹி - ஜனக்புரி (நேபாளம்) - அயோத்தி - நந்திகிராமம் - அலகாபாத் - சிருங்கவேர்புர்
05.03.20 (14 நாட்கள்) Rs.15,990/-
90031 40680
90031 40655 / 714

வங்கி ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

■ பெரம்பலூர்

வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் பெரம்பலூரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பெரம்பலூர் வெங்கடேசபுரம் பகுதியில் உள்ள ஸ்டேட் வங்கி கிளை அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு, ஸ்டேட் வங்கி பெரம்பலூர் கிளை தொழிலாளர்கள் சங்கத் தலைவர் ஆர்.சுஜீத் தலைமை வகித்தார். சங்க நிர்வாகிகள் சந்திரசேகர், மனோகர், சக்திவேல், அம்சபுவனா, முரளி சந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில், வங்கி ஊழியர்களின் ஊதிய ஒப்பந்தத்தை விரைவாக நடைமுறைப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய ஓய்வூதியத் திட்டத்தை கைவிட வேண்டும். வாரத்தில் 5 நாட்கள் மட்டும் வேலை நாட்களாக அறிவிக்க வேண்டும். வங்கி அதிகாரிகளுக்கு வரையறுக்கப்பட்ட வேலைநேரம் வழங்க வேண்டும். வாராக் கடனை விரைவாக வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

வருந்துகிறோம்!

இரங்கல்

இறப்பு

கண்ணீர் அஞ்சலி

திருசெங்காட்டங்குடி
திருமதி கோதை சத்தியமூர்த்தி
26.02.2020 அன்று ஆச்சார்யன் திருவடி அடைந்தார்
நீங்கா அன்புடன்
குடும்பத்தார்: சத்தியமூர்த்தி ஸ்ரீராம் & அஸ்வினி, சுபா & ரகுநாதன்
கை பேசி: 89395 98375

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

SBI பாரத ஸ்டேட் பாங்கு

ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை, விநாயக நகர் கிளை முதல் தளம், எண்.8, அம்பேத்கர் சாலை, மதுரை – 625020.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறுசீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 13(4) (சர்ஃபாசி சட்டம் 2002)–ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனை. சர்ஃபாசி சட்டம் 2002 பிரிவு 13(4)ன் படி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை வங்கியின் அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள **அசையா** சொத்துக்களின் மீதான கடன் நிலுவைத் தொகையை சர்ஃபாசி சட்டம் 2002–ன் மூலம் மீட்பதற்காக சொத்துக்கள் **“என்ன உள்ளதோ அப்படியே” ‘எங்கு உள்ளதோ அந்நிலையிலேயே’** முறையில் இ–ஏல விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரர் பெயர் : M/s. **ஹோட்டல் சம்பத்**

கதவு எண்.46C, சத்திரம் பேருந்து தெரு, கரூர் பைபாஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி–620002, **திரு.K.சம்பத், உரிமையாளர் & ஜாமீன்தாரர்,** கதவு எண்.46C, சத்திரம் பேருந்து தெரு, கரூர் பைபாஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி–620002, **திருமதி.S.மரியா ஃப்ளோரா, க/பெ.K.சம்பத், ஜாமீன்தாரர்,** 3/4, தாமரைசாலை, அண்ணாமலை நகர் விரிவாக்கம், திருச்சிராப்பள்ளி–620017, **திருமதி.S.மாலதி, க/பெ.S.சதிஷ், ஜாமீன்தாரர்,** 1/469, 7–வது கிராஸ் வாசன் நகர், ரெட்வாய்க்கால் வயலூர் ரோடு, திருச்சி–620012.

விற்பனைக்குள்ள சொத்து மீதான நிலுவைத்தொகை 25.02.2020 தேதிப்படி ரூ. 12,35,47,313.74 (ரூபாய் பன்னிரெண்டு கோடியே முப்பத்தைந்து லட்சத்து நாற்பத்தேழாயிரத்து முந்நூற்று பதிமூன்று மற்றும் பைசா எழுபத்து நான்கு மட்டும்) மேற்படி நிலுவைக்கு மேல் வட்டி + பிற செலவினங்கள்.

கேட்பு அறிவிப்பு 13(2) : 30.06.2018 & சுவாதீன அறிவிப்பு 13(4) : 05.09.2018.

அசையா சொத்து விபரம் : இனம் A :–

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம், திருச்சிராப்பள்ளி தாலுகா, உறையூர் சார் பதிவு மாவட்ட முனிசிபல் வார்டு எண்.3, பிளாக் எண்.64, பழைய டவுன் சர்வே எண்.3988/1 & 3988/3–ல் ஏக்கர் 1.80 சென்டுகள் நிலத்தில் உள்ள 0.90 சென்டுகளில் உள்ள 28529 சதுரடி நிலத்திற்குள் அமைந்துள்ள 15022 சதுரடி நிலம், புதிய வார்டு B, புதிய பிளாக் எண்.20, புதிய டவுன் சர்வே எண்.3–ல் அமைந்துள்ள சொத்தின் நான்கு மால் :– கிழக்கே : TS.எண்.25/5B1–ல் உள்ள சொத்து, மேற்கே : தாமரைசாலை, வடக்கே : ராணி மலர்மன்னன் வசமுள்ள சொத்து & பிறர் சொத்து, தெற்கே : TS.எண்.2/1, TS.எண்.25/5B1 & TS.எண்.20–ல் உள்ள ஜே.சி.டவர். **இதற்குள் 1)** கிழமேல் வடக்கே 189 அடி, கிழமேல் தெற்கே 181 அடி, தென்வடல் கிழக்கே 60 அடி, தென்வடல் மேற்கே 60 அடி. மொத்தம் 11,100 சதுரடி. **இதற்குள் 2)** கிழமேல் வடக்கே 55–1/2 அடி, கிழமேல் தெற்கே 70 அடி, தென்வடல் கிழக்கே 60 அடி, தென்வடல் மேற்கே 65 அடி. மொத்தம் 3,922 சதுரடி. மேற்கூறிய சொத்து **திரு.K.சம்பத், த/பெ.குட்டியாபிள்ளை மற்றும் திருமதி.S.மாலதி, க/பெ.சதிஷ் ஆகியோருக்கு சொந்தமானது.**

நிர்ணய விலை ரூ. **8,89,00,000/-** (ரூபாய் எட்டு கோடியே எண்பத்தொன்பது லட்சம் மட்டும்) முன் வைப்பு ரூ. **88,90,000/-** (ரூபாய் எண்பத்தெட்டு லட்சத்து தொன்னூறாயிரம் மட்டும்) ஏலக் கேட்பு மடங்கு ரூ. **50,000/-**

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 20.03.2020 பகல் 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை. (விற்பனை முடியும் வரை 5 நிமிட தானியங்கி கால நீட்டிப்புடன்)

(EMD) 10% முன் வைப்புத் தொகை செலுத்தும் முறை: பாரத ஸ்டேட் பாங்கு, எண்.8, டாக்டர் அம்பேத்கர் ரோடு, விநாயக நகர் கிளை முதல் தளம், மதுரை–625020, **SBI** பார்க்கிங் கணக்கு எண். **38676668762** கிளை கோடு : 01479, **IFSC Code No.SBIN0001479**-ல் ஏலக்குறியீடுகள் சமர்ப்பிப்பதற்கு முன்னதாகவே மின்னணு **(EFT/RTGS/NEFT)** மூலம் பணப்பரிமாற்றம் செய்யப்பட வேண்டும்.

முன்வைப்புத் தொகை & KYC ஆன்லைனில் சமர்ப்பிக்க கடைசி தேதி / நேரம் : **18.03.2020** அன்றோ அதற்கு முன்பாகவோ **காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை.**

சொத்துக்களைப் பார்வையிட நாள் / நேரம் : **17.03.2020 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை.**

தொடர்புக்கு : மொபைல் : **9445863671.** தொலைபேசி : **0452 - 2531047.**

விரிவான விற்பனை விதிகள் & நிபந்தனைகளுக்கு வங்கியின் இணையதளம் **www.sbi.co.in**-ல் சென்று பார்க்கவும்.

நாள் : 26.02.2020.
இடம் : மதுரை.

அங்கீகாரம் பெற்ற அதிகாரி,
பாரத ஸ்டேட் பாங்கு, ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை, மதுரை.

SBI பாரத ஸ்டேட் பாங்கு

ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை, விநாயக நகர் கிளை முதல் தளம், எண்.8, அம்பேத்கர் சாலை, மதுரை – 625020.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறுசீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 13(4) (சர்ஃபாசி சட்டம் 2002)–ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனை. சர்ஃபாசி சட்டம் 2002 பிரிவு 13(4)ன் படி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை வங்கியின் அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள **அசையா** சொத்துக்களின் மீதான கடன் நிலுவைத் தொகையை சர்ஃபாசி சட்டம் 2002–ன் மூலம் மீட்பதற்காக சொத்துக்கள் **“என்ன உள்ளதோ அப்படியே” ‘எங்கு உள்ளதோ அந்நிலையிலேயே’** என்ற முறையில் இ–ஏல விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரர் பெயர் : **திரு.V.ஷங்கர் & திருமதி.S.லெக்ஷ்மி**

விற்பனைக்குள்ள சொத்து மீதான நிலுவைத்தொகை 25.02.2020 தேதிப்படி ரூ. **1,44,69,822.06** [illegible] மேற்படி நிலுவைக்கு மேல் வட்டி + பிற செலவினங்கள்.

கேட்பு அறிவிப்பு 13(2) : 22.05.2017 & சுவாதீன அறிவிப்பு 13(4) : 19.07.2019.

அசையா சொத்து விபரம் :

[illegible]

நிர்ணய விலை ரூ. **67,00,000/-** (ரூபாய் அறுபத்தேழு லட்சம் மட்டும்) முன் வைப்பு ரூ. **6,70,000/-** (ரூபாய் ஆறு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்) ஏலக் கேட்பு மடங்கு ரூ. **50,000/-**

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 20.03.2020 பகல் 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை. (விற்பனை முடியும் வரை 5 நிமிட தானியங்கி கால நீட்டிப்புடன்)

(EMD) 10% முன் வைப்புத் தொகை செலுத்தும் முறை: பாரத ஸ்டேட் பாங்கு, எண்.8, டாக்டர் அம்பேத்கர் ரோடு, விநாயக நகர் கிளை முதல் தளம், மதுரை–625020, **SBI** பார்க்கிங் கணக்கு எண். **38676668762** கிளை கோடு : 01479, **IFSC Code No.SBIN0001479**-ல் ஏலக்குறியீடுகள் சமர்ப்பிப்பதற்கு முன்னதாகவே மின்னணு **(EFT/RTGS/NEFT)** மூலம் பணப்பரிமாற்றம் செய்யப்பட வேண்டும்.

முன்வைப்புத் தொகை & KYC ஆன்லைனில் சமர்ப்பிக்க கடைசி தேதி / நேரம் : **18.03.2020** அன்றோ அதற்கு முன்பாகவோ **காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை.**

சொத்துக்களைப் பார்வையிட நாள் / நேரம் : **17.03.2020 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை.**

தொடர்புக்கு : மொபைல் : **9445863671.** தொலைபேசி : **0452 - 2531047.**

விரிவான விற்பனை விதிகள் & நிபந்தனைகளுக்கு வங்கியின் இணையதளம் **www.sbi.co.in**-ல் சென்று பார்க்கவும்.

நாள் : 26.02.2020.
இடம் : மதுரை.

அங்கீகாரம் பெற்ற அதிகாரி,
பாரத ஸ்டேட் பாங்கு, ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை, மதுரை.

எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, திருப்பூர், சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by K. Venkatesan at Ward No. 27, RS No. 43-1B, Ariyamangalam Zone, Varaganery Village, Chennai Bye Pass Road, Senthaneerpuram, Tiruchirapalli-620004 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).